ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/13 - 2022 ඔක්තෝබර් මස 31 වැනි සඳුදා - 2022.10.31

2304/13 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III - காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தி. பிராலே: 1/8/3/62 அத்.
காணி அமைச்சின் தொடர் இல.: 4-3/2/2017/ BIO/281.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

கிரான்ட் ஹய்ட் ஹோட்டல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற காணியின் விபரம்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொள்ளுப்பிட்டி அலுவலர் பிரிவு இல. 37 இல் கொள்ளுப்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியினால் வரையப் பட்ட முற்பிரதி வரைபடத்தின் இல. Co 10041 மற்றும் 2022.10.13 ஆந் திகதியைக் கொண்டமைந்துள்ள இல. 1 மற்றும் 2 எனக் குறிப்பிடப்பட்ட 0.0571 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டுகளின் விபரங்கள்:

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: வரிப்பண இல. 134/1, காலி வீதி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டடத்தின் ஒரு பகுதி உள்ளது; உரிமை கோருவோர்: செலிங்கோ கோமஸ் இன்டர்நஷனல் (லோட்டர்ஸ் டவர்) லிமிடட்; விஸ்தீரணம் : 0.0554 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: வரிப்பண இலக்கம் கண்டறியப் படமுடியவில்லை, காலி வீதி; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருவோர்: கண்டறியப் படமுடியவில்லை; விஸ்தீரணம் : 0.0017 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.12.20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2022.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரியந்த திஸாநாயக்கா,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2022, ஒற்றோபர் 27.

EOG 10 - 0308